*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly · Peer-Reviewed · Open Access · Crossref · Google Scholar
SJIF Impact Factor 4.355 · Multidisciplinary · International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p508-522** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# சங்க இலக்கியத்தில் உணர்வுசார் நுண்ணறிவு: அகப்புற இலக்கியங்களை முன்வைத்து ஓர் ஒப்பீட்டு ஆய்வு

Emotional Intelligence in Sangam Literature: A Comparative Study of Akam and Puram Poetry

**முனைவர் க. விஜயலெட்சுமி**,,
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி ,
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவுப் பெற்றது, திருச்சி- 2.

**Dr. K. Vijayalakshmi*,**
*Assistant professor, Department of Tamil, Shrimathi Indira Gandhi College,*
*(Affiliated with Bharathidasan University), Tiruchirappalli–2. Tamil Nadu, India*
*Email: vijayalakshmik@sigc.edu*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 27-08-2026
**Published: 28-08-2026**
*Corresponding Author Email:
*vijayalakshmik@sigc.edu*

**Abstract:** Sangam literature serves as a remarkable repository of ancient Tamil life, culture, ethics, social relationships, and human emotions. This study analyzes the human emotions and emotional management techniques depicted in Sangam poetry through the lens of modern psychological Emotional Intelligence (EI) theory. Relying on Tholkappiyam's concept of Meyppatu (emotive expression) as a foundational framework, the paper examines interior (Akam) works like Kuruntokai, Ainkurunuru, Akananuru, Narrinai, and Kalittokai, where dialogues between lovers and the confidante (Thozhi) exhibit love, separation, patience, emotional regulation, and empathy. A prominent example includes the confidante sensing the heroine's state of mind to comfort her, exemplifying high emotional awareness and interpersonal relationship management. Furthermore, exterior (Puram) poetry like Purananuru and Patirruppattu is analyzed for leadership qualities and social consciousness. By comparing the core dimensions of EI defined by Peter Salovey, John Mayer (1990), and Daniel Goleman (1995)—self-awareness, self-regulation, motivation, empathy, and social skills—with Sangam emotion theories, the research demonstrates how ancient Tamil emotional and social perspectives remain directly relevant to modern individual growth and social harmony.

**Keywords:** *Emotional Intelligence, Meyppatu (Theory of Emotive Expression), White Pearls, Meat Preparation, Red-Handed Warriors, Rainwater on Red Soil, Akam and Puram Poetic Conventions.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

### ஆய்வுச் சுருக்கம் (Abstract)

சங்க இலக்கியம் பழந்தமிழரின் வாழ்வியல், பண்பாடு, அறநெறி, சமூக உறவுகள் மற்றும் மனித உணர்வுகளை இயல்பாகப் பதிவு செய்துள்ள சிறப்புமிக்க இலக்கியப் படைப்பாகும். அவ்வகையில், "சங்க இலக்கியத்தில் உணர்வுசார் நுண்ணறிவு" என்னும் இவ்வாய்வு, சங்கப் பாடல்களில் வெளிப்படும் மனித உணர்வுகளையும் அவற்றைக் கையாளும் முறைகளையும், நவீன உளவியலின் 'உணர்வுசார் நுண்ணறிவு' (Emotional Intelligence) எனும் கோட்பாட்டு வெளிச்சத்தில் வைத்து ஆராய்கிறது. தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் மெய்ப்பாடுகள் உணர்வுகளின் வெளிப்பாட்டை அறிந்துகொள்வதற்கான அடிப்படையாக அமைகின்றன. குறிப்பாக, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, கலித்தொகை போன்ற அகப்பாடல்களில் தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் உரையாடல்கள் மூலம் அன்பு, பிரிவு, வருத்தம், பொறுமை, உணர்வைக் கட்டுப்படுத்துதல், பிறர் மனநிலையைப் புரிந்துகொள்ளுதல் போன்ற பண்புகள் வெளிப்படுகின்றன. தலைவியின் மனநிலையை உணர்ந்து ஆற்றுப்படுத்தும் தோழியின் செயல்பாடு, பிறரது உணர்வைப் புரிந்துகொண்டு உறவைச் சீராக நடத்தும் நுண்ணறிவிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய புறப்பாடல்களில் தலைமைத்துவப் பண்புகளும் சமூக உணர்வும் ஆராயப்படுகின்றன. பீட்டர் சலோவே, ஜான் மேயர் (1990) மற்றும் டேனியல் கோல்மென் (1995) முன்வைத்த உணர்வுசார் நுண்ணறிவுக் கூறுகளான சுயவிழிப்புணர்வு, சுயமேலாண்மை, தன்னூக்கம், பிறருணர்வு (Empathy), சமூகத் திறன் ஆகியவற்றை சங்கப் பாடல்களின் மெய்ப்பாட்டியலுடன் ஒப்பிட்டு இவ்வாய்வு ஆராய்கிறது. இவ்வாய்வு, சங்கத் தமிழரின் உணர்வியல் சமுதாய சிந்தனைக்கும், இன்றைய தனிமனித வளர்ச்சிக்கும், சமூக நல்லிணக்கத்திற்கும் பொருத்தமானவை என்பதை எடுத்துரைக்கிறது.

### திறவுச்சொற்கள் (Keywords)

- 1. உணர்வுசார் நுண்ணறிவு (Emotional Intelligence) — உணர்ச்சி
- 2. மெய்ப்பாடு (Tholkappiyam's theory of emotive expression)
- 3. வெண் முத்தம் — வெண்மையான முத்துக்கள்
- 4. ஊன் துவை — இறைச்சி
- 5. செங்கை மறவர் — வீரர்
- 6. செம்புலப் பெயல் நீர் — செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர்
- 7. அகம்/புறம் (Akam/Puram poetic conventions)

KALANJIYAM

## 1. முன்னுரை

சங்க இலக்கியத்தின் மிகப்பெரிய சிறப்பு, அது ஒரு குறிப்பிட்ட காலத்து மன்னர்களின் வரலாற்றையோ வீரச் செயல்களையோ மட்டும் பதிவு செய்யாமல், மனித வாழ்வின் அகமும் புறமும் இணைந்த முழுமையான வாழ்க்கைச் சித்திரத்தை வழங்குவதிலேயே அமைந்துள்ளது. எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் இணைந்து சங்க இலக்கியத்தின் பெரும் பரப்பை உருவாக்குகின்றன; அவற்றில் காதல், பிரிவு, ஊடல், கூடல் போன்ற அக உணர்வுகளிலிருந்து போர், வீரம், கொடை, அரசாட்சி, அறம், சமூகப் பொறுப்பு போன்ற புற வாழ்வியல் கூறுகள் வரை பல பரிமாணங்கள் பதிவாகியுள்ளன. 'உணர்வுசார் நுண்ணறிவு' என்பதைத் தனிநபர் ஒருவர் தன்னுடைய உணர்வுகளை உணரவும், புரிந்துகொள்ளவும், சமயோசிதமாக வெளிப்படுத்தவும் அல்லது கட்டுப்படுத்தவும் மட்டுமன்றி பிறரின் உணர்வையும் அறிந்து, சரியான முறையில் செயல்பட உதவும் உளவியல் திறன்களின் தொகுப்பு எனலாம்.

1980ஆம் ஆண்டளவில் மனித உணர்வுகள் (Emotions) குறித்து ஆய்வு செய்த உளவியலாளர்கள், சாதனையாளர்களின் வெற்றிக்குப் பின்னணியில் அவர்களுடைய அறிவுத் திறனைவிட உணர்வுத் திறன் முக்கியப் பங்கு வகித்திருந்ததைக் கண்டறிந்தனர். இக்கண்டுபிடிப்பின் தொடர்ச்சியாக, 1990ஆம் ஆண்டில் அமெரிக்க உளவியலாளர்களான பீட்டர் சலோவே (Peter Salovey), ஜான் மேயர் (John Mayer) ஆகியோர் "Emotional Intelligence" என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை ஒன்றை Imagination, Cognition and Personality என்னும் ஆய்விதழில் வெளியிட்டு, உணர்வுகளை உணரவும் புரிந்துகொள்ளவும் நிர்வகிக்கவும் உதவும் திறனாக 'உணர்வுசார் நுண்ணறிவை' முதன்முதலில் கோட்பாடாக்கினர். இதைத் தொடர்ந்து அமெரிக்க உளவியலாளரும் அறிவியல் பத்திரிகையாளருமான டேனியல் கோல்மென் (Daniel Goleman) 1995ஆம் ஆண்டில் 'Emotional Intelligence: Why It Can Matter More Than IQ' என்கிற நூலை எழுதினார்.

அதன் பின்புதான் 'உணர்வுசார் நுண்ணறிவு' என்பது உலகெங்கும் பிரபலமானது. கோல்மெனின் கருத்துப்படி, ஒருவரின் 'உணர்வுசார் நுண்ணறிவு' என்பது தன்னுடைய உணர்வுகளை அறிந்துகொள்ளும் சுய விழிப்புணர்வு (Self-awareness), தன்னுடைய உணர்வுகளைச் சரியாக நிர்வகிக்கும் சுயமேலாண்மை (Self-regulation), தன்னூக்கம் (Motivation), பிறரது உணர்வுகளைப் புரிந்துகொண்டு நடக்கும் பிறருணர்வு (Empathy), பிறருடனான உறவுகளைச் சரியாகக் கையாளும் சமூகத் திறன் (Social Skills) ஆகிய ஐந்து பண்புக் கூறுகளைக் கொண்டது.

சங்க இலக்கியத்தின் தனித்துவம் "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் உலகப்பொதுமைச் சிந்தனையில் உச்சத்தை அடைகிறது. இது ஒரு குறிப்பிட்ட இனத்தையோ

நாட்டையோ மையப்படுத்திய சிந்தனை அல்ல; மனிதனை மனிதனாக ஏற்றுக்கொள்ளும் பரந்த மனப்பான்மை. அதனோடு,

***"தீதும் நன்றும் பிறர்தர வாரா;***

***நோதலும் தணிதலும் அவற்றோரன்ன"***

என்ற சிந்தனை, வாழ்க்கை நிகழ்வுகளை வெளிப்புறக் காரணிகளால் மட்டுமே பார்க்காமல், அவற்றை மனப்பக்குவத்துடன் எதிர்கொள்ளும் நிலையை வெளிப்படுத்துகிறது. இக்கருத்து இன்றைய உணர்வுசார் நுண்ணறிவு, சுயப்பொறுப்பு, மனத்திட்பம் ஆகியவற்றுடன் உரையாடக்கூடியதாக உள்ளது.

அதேபோல்,

***"பெரியோரை வியத்தலும் இலமே;***

***சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."***

என்ற புறநானூற்றுச் சிந்தனை, மனிதர்களை உயர்வு-தாழ்வு என்ற அளவுகோலில் மதிப்பிடாமல் சமநிலையோடு அணுகும் சமூக உளவியலை வெளிப்படுத்துகிறது. இது பிறருணர்வு, சமூக விழிப்புணர்வு, மனித சமத்துவ உணர்வு ஆகியவற்றின் தொன்மையான வெளிப்பாடாக வாசிக்கப்படலாம்.

சங்க அக இலக்கியத்தில் தலைவன்-தலைவி உறவு என்பது அன்பு மட்டுமன்று; அதனுள் எதிர்பார்ப்பு, ஏமாற்றம், பொறாமை, ஊடல், சமாதானம், மீண்டும் கூடுதல் போன்ற பல்வேறு உணர்வு நிலைகள் இயங்குகின்றன. குறிப்பாக மருதத்திணைப் பாடல்களில் தலைவன் பரத்தையிடம் செல்வதும், அதனால் தலைவிக்கு ஏற்படும் ஊடலும், உணர்வுசார் நுண்ணறிவை ஆராய்வதற்குச் சிறந்த களமாக அமைகிறது.

ஐங்குறுநூற்றின் மருதப்பகுதியில் தலைவன் பரத்தையிடம் சென்று திரும்பிய பின்னர், தலைவி நேரடியாக அவனை ஏற்றுக்கொள்ளாமல் ஊடல் கொள்கிறாள். இவ்வூடலின் அடிப்படையில் வெறும் கோபம் மட்டுமல்லாமல், அன்பு, உரிமை உணர்வு, ஏமாற்றம், எதிர்பார்ப்பு, தன்னருமை ஆகிய உணர்வுகள் அடங்கியுள்ளன. இதனைத் தலைவியின் உணர்வுசார் நுண்ணறிவின் ஒரு வடிவமாகக் காணலாம். தன் மனத்தில் ஏற்பட்ட வலியை வெளிப்படுத்தினாலும், உறவை முறித்துவிடாமல் அதன் வழியாகத் தலைவனின் தவறை உணர்த்துகிறாள். தலைவனின் பரத்தைமை காரணமாகத் தலைவிக்கு ஏற்படும் மனவருத்தம், தொல்காப்பியத்தின் "வெகுளி", "அழுகை", "இளிவரல்" போன்ற மெய்ப்பாடுகளோடு தொடர்புபடுத்தி ஆராயலாம். அதேவேளை ஊடல் தீர்ந்து தலைவன்-தலைவி

கூடும் நிலையில் "உவகை" வெளிப்படுகிறது. இதனால் ஒரே உறவுக்குள் பல்வேறு உணர்வுகள் தோன்றி, அவை ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாறும்.

### 2. ஆய்வின் நோக்கமும் எல்லையும்

இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைகிறது:

- தொல்காப்பியத்தின் மெய்ப்பாட்டியல் கோட்பாட்டையும் நவீன உணர்வுசார் நுண்ணறிவுக் கோட்பாட்டையும் ஒப்பிட்டு ஆராய்தல்.
- குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை, நற்றிணை ஆகிய அகப்பாடல்களில் தலைவன், தலைவி, தோழி ஆகியோர் வெளிப்படுத்தும் உணர்வு மேலாண்மையை அடையாளம் காணுதல்.
- புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய புறப்பாடல்களில் வெளிப்படும் தலைமைத்துவ உணர்வுசார் நுண்ணறிவையும் சமூக உணர்வையும் ஆராய்தல்.
- சங்க இலக்கியத்தில் காணப்படும் உணர்வுசார் நுண்ணறிவுக் கூறுகள் இன்றைய தனிமனித வளர்ச்சிக்கும், உறவு மேலாண்மைக்கும், தலைமைத்துவத்திற்கும் எவ்வாறு பொருந்துகின்றன என்பதை மதிப்பீடு செய்தல்.

### 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு தரமான (Qualitative), விளக்கவுரை நோக்கிய (Textual-Analytical) முறையியலைப் பின்பற்றுகிறது. முதன்மை ஆதாரங்களாகத் தொல்காப்பியம், எட்டுத்தொகை நூல்களில் குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகியவும், பத்துப்பாட்டு நூல்களுள் பதிற்றுப்பத்தும் பயன்படுத்தப்பட்டுள்ளன. துணை ஆதாரங்களாக நவீன உளவியலின் உணர்வுசார் நுண்ணறிவுக் கோட்பாடு தொடர்பான வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும், நூல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல் வரிகள் மூலப்பாட வடிவிலேயே மேற்கோள் காட்டப்பட்டு, அவற்றின் உணர்வியல் பரிமாணங்கள் மெய்ப்பாட்டியல் மற்றும் உணர்வுசார் நுண்ணறிவுக் கோட்பாட்டு அடிப்படையில் ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளன.

### 4. கோட்பாட்டு பின்னணி: தொல்காப்பியமும் மெய்ப்பாட்டியலும்

"நகையே அழுகை இளிவரல் மருட்கை

*அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று*

*அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப."*

இதை வெறும் இலக்கணக் கருத்தாகப் பார்க்காமல், உணர்வுகள் உள்ளத்தில் தோன்றி உடல்/முக வெளிப்பாடுகளின் வழியாகப் புலப்படும் உளவியல் செயல்முறை என்று பார்க்கலாம். பேராசிரியர்கள் இளிவரலுக்குப் பின் மருட்கையும் அதன்பின் அச்சமும் வைக்கப்பட்டமைக்குக் கூறும் காரணம்

நிறைவு தருவதாக இல்லை என்றும், மற்று இவற்றைச் சுவை என வழங்கினும் அமையும் என்றும் சிலர் கருதுவர். சுவை நாடகத்தமிழுக்குரியது; மெய்ப்பாடு இயற்றமிழுக்குரியது. இவ் எண்வகை மெய்ப்பாடுகளும் தோன்றுதற்குரிய அடிப்படைப் பொருள்கள் பலவாயினும், அவற்றுள் அகத்திணைக்கும் புறத்திணைக்கும் பொருந்துவனவாய், சிறப்பாக வருவனவாய் உள்ளவற்றைத் தொகுத்து ஒவ்வொன்றுக்கும் நான்கு நான்கு பொருள்களை விதந்து கூறப்படுகிறது.

மேலைநாட்டு உளவியலாளர்கள் உணர்ச்சிகளை (Emotions) மனவெழுச்சி நிலையில் வகைப்படுத்தி ஆராய்கின்றனர்; அதேசமயம் தொல்காப்பியர் மெய்ப்பாடுகளைத் திணை மரபோடும் சூழலோடும் இணைத்து, இன்னின்ன சூழலில் இன்னின்ன மெய்ப்பாடு தோன்றும் எனும் அமைப்புமுறை நோக்கில் விளக்குகிறார். மெய்ப்பாட்டியல் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் ஒன்பது இயல்களுள் ஆறாவது இயலாக அமைந்துள்ளது; எண்வகை மெய்ப்பாடுகளும் தோன்றும் இடங்கள் ஒவ்வொன்றும் நான்கு வகைகளாகப் பகுத்துக் காட்டப்பட்டுள்ளன. இக்கோட்பாடு, சலோவே-மேயர் முன்வைத்த 'உணர்வுகளை அடையாளங் காணல்' (Perceiving Emotion) எனும் அடிப்படைக் கூறோடு நேரடியாக ஒப்பிடத்தக்கது.

கோல்மென் முன்வைத்த ஐந்து கூறுகளுள் முதலாவதான சுயவிழிப்புணர்வு என்பது தன் உணர்வுகளை அறிந்துகொள்ளும் திறன்; இரண்டாவதான சுயமேலாண்மை என்பது அவ்வுணர்வுகளைச் சூழலுக்கேற்பக் கட்டுப்படுத்தும் திறன். இவ்விரண்டும் தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடுகள் வெளிப்படும் விதத்தையும் அவை கட்டுப்படுத்தப்படும் விதத்தையும் ஒப்பிட்டு ஆராய்வதற்கு அடிப்படையாக அமைகின்றன.

## 5. அகப்பாடல்களில் உணர்வுசார் நுண்ணறிவு

### *5.1 குறுந்தொகை — காதலில் உணர்வு*

தலைவனுக்கும் தலைவிக்குமிடையே எதிர்பாராத சந்திப்பின்பால் காதல் மலர்ந்தது. இப்படி முன்பின் தெரியாத இளைஞனுடன் கண்டதும் காதல் ஏற்பட்டதால் தலைவிக்குத் தலைவன் மேல் ஐயமேற்படுகிறது; எங்கு இவன் நம்மை விட்டுச் சென்றுவிடுவானோ என்ற பயம் தான் அது. தலைவியின் முகத்தில் சட்டெனத் தோன்றிய கவலையை உணர்ந்த தலைவன், தங்கள் கண்ணெதிரே தோன்றிய செம்மண் நிலத்தோடுச் சேர்ந்த நீரை எப்படி பிரிக்க முடியாதோ அதுபோலவே நம்மிருவரையும் பிரிக்கமுடியாது என்று காதல் மிகுதியில் தலைவியிடம் கூறும் பாடல்,

***"யாயும் ஞாயும் யார் ஆகியரோ?***
***எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?***
***யானும் நீயும் எவ்வழி அறிதும்?***
***செம்புலப் பெயல்நீர் போல***

*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே."*

**— குறுந்தொகை, பாடல் 40**

மேலே குறிப்பிட்ட பாடல் வரியின் வாயிலாக, என் தாயும் உன் தாயும் யார் யாரோ? என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையில் உறவானார்கள்? எந்த உறவின் வழியாக நானும் நீயும் அறிந்து கொண்டோம்? செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் போல அன்புடைய நம் நெஞ்சம் தாமாக ஒன்றுபட்டனவே என்ற பொருள் விளங்கும். இப்படி செம்மண் நிலத்திலிருக்கும் நீர் போல் தலைவனும் தலைவியும் ஒன்றுபட்டிருந்தனர். இங்கு காதல் என்பது வெறும் உணர்ச்சியல்ல; இரு தனிமனிதர்களின் உள்ளங்கள் ஒன்றையொன்று ஏற்றுக்கொண்டு, வேறுபட்ட பின்னணிகளைத் தாண்டி உணர்வால் ஒன்றிணைதல் நிகழ்கிறது. தலைவியின் அச்சத்தை உணர்ந்து உடனடியாக அதை ஆற்றுப்படுத்தும் தலைவனின் செயல்பாடு, கோல்மென் குறிப்பிடும் 'பிறருணர்வு' (Empathy) எனும் கூறுக்கு அகச்சான்றாக அமைகிறது.

### 5.2 ஐங்குறுநூறு — ஊடல், பரத்தைமை, உணர்வு

ஐங்குறுநூறு அகத்திணை சார்ந்த 500 பாடல்களைக் கொண்டது; ஐந்து திணைகளுக்கும் நூறு பாடல்கள் என அமைந்துள்ளது. மருதத்திணைப் பாடல்களில் தலைவன், தலைவி, தோழி, பரத்தை ஆகிய உறவுகளுக்குள் ஏற்படும் மனநிலைகளை ஆய்வது, அதேபோல் தோழி தலைவியின் உணர்வை உணர்ந்து தலைவனிடம் எடுத்துச் செல்வது ஆகிய இரு கூறுகளுக்குச் சிறந்த இலக்கியச் சான்றாக அமையும்.

*தன் பார்ப்புத் தின்னும் அன்பு இல் முதலையொடு*
*வெண்பூம் பொய்கைத்து அவன் ஊர் என்ப, அதனால்*
*தன் சொல் உணர்ந்தோர் மேனி*
*பொன் போல் செய்யும் ஊர் கிழவோனே.*

**— ஐங்குறுநூறு, பாடல் 41**

மேலே குறிப்பிட்ட பாடல் வரியின் வாயிலாக, தலைவனை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிய பாணனிடமும் தலைவனின் நண்பர்களிடமும் தலைவி சொன்னது தோழியின் கூற்றாகக் கொள்ளப்படுகிறது. தன் பிள்ளைகளைத் தின்னும் அன்பில்லாத முதலையுடன், வெள்ளை நிற மலர்களையுடைய நீர்நிலைகளை உடையது அவனுடைய ஊர் எனக் கூறப்படும். அதனால், தன்னுடைய பொய்யை மெய் என்று நம்பும் மகளிரின் மேனியில் பசலையைப் பரவச் செய்யும் கொடுமையுடையவனாக அந்த ஊர்த் தலைவன் உள்ளான். இப்பாடலில் தோழி தலைவியின் மனவேதனையைத் தன் சொந்த உணர்வாக ஏற்றுக்கொண்டு, மறைமுகமான உவமையின் வழி தலைவனிடம் அறிவுறுத்துவது, சமூகத் திறன் (Social Skill) மற்றும் பிறருணர்வு (Empathy) ஆகிய இரு கூறுகளும் இணைந்த நுண்ணறிவுச் செயல்பாடாகும்.

### *5.3 அகநானூறு — உணர்வு*

அகநானூற்றில் தலைவன் காதலுக்குள் மட்டுமே இயங்குபவனாக இல்லாமல், பொருள் தேடுதல், பிரிதல், சமூகப் பொறுப்பு, குடும்பப் பொறுப்பு போன்ற காரணிகளால் முடிவெடுப்பவனாகவும் சித்திரிக்கப்படுகிறான்.

***அளிநிலை பொறா அது அமரிய முகத்தள்,***
***விளிநிலை கொள்ளாள், தமியள், மென்மெல,***
***நலம்மிகு சேவடி நிலம் வடுக்கொளாஅ,***
***குறுக வந்து, தன்கூர் எயிறு தோன்ற***
***வறிது அகத்து எழுந்த வாய் அல் முறுவலள் . . .***

**— அகநானூறு, பாடல் 05**

இப்பாடலில் தலைவியின் ஊடலும் அதன் வழியாக வெளிப்படும் மென்மையான கோபமும், மொழியால் அல்லாமல் உடல்மொழி வழியாக வெளிப்படுவது தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாட்டு நுட்பத்திற்குச் சான்றாகும். இத்தகைய நுட்பமான உணர்வு வெளிப்பாடுகளை உணர்ந்துகொள்ளும் திறனே நவீன உளவியலில் 'உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளுதல்' (Understanding Emotion) எனப்படுகிறது.

### *5.4 கலித்தொகை — உணர்வின் நாடகத் தன்மை*

கலித்தொகையில் காதல், பிரிவு, ஊடல், கூடல், அச்சம், நாணம், மகிழ்ச்சி போன்ற உணர்வுகள் உரையாடல் மற்றும் காட்சிநிலைகளின் வழியாக மிகவும் உயிர்ப்புடன் வெளிப்படுகின்றன. தலைவனுடன் உடன்போக்குச் சென்ற தலைவியைத் தேடி செவிலித்தாய் செல்கிறாள். எங்கு தேடியும் தலைவியைக் காணாமல் அலைந்து சோர்ந்து, வழியில் வந்த சான்றோர்களை நோக்கி, எம் மகளைக் கண்டீர்களா எனக் கேட்டுப் புலம்புகிறாள். அப்பெரியோர்களோ, ஓர் வீட்டில் பிறந்த பெண் வேறொரு வீட்டில் சென்று வாழும் உலக இயல்பையும், காதல் வாழ்வின் எதார்த்த நிலையையும் பின்வருமாறு உணர்த்துகின்றனர்.

***பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை***
***மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செய்யும்***
***நினை யுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கனையளே***
***சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை.***

**— கலித்தொகை, பாடல் 9**

அதேபோல, சுற்றறிந்தார் ஏத்தும் கலி என்று சிறப்பித்துச் சொல்லப்படும் கலித்தொகையில், மனித வாழ்க்கையின் உயர் விழுமியங்களாகக் கருதப்படும் ஆற்றுதல், போற்றுதல், அன்பு, பண்பு, அறிவு,

செறிவு, நிறைவு, முறை, பொறை என்பனவற்றிற்கு அழகான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருப்பது எதார்த்த நிலையை வெளிப்படுத்துவதாகக் கூறலாம்.

***ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தார்க்கு உதவுதல்***

***போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை***

**— கலித்தொகை, பாடல் 133**

'ஆற்றுதல்' எனும் சொல் இன்று உணர்வுசார் நுண்ணறிவில் குறிப்பிடப்படும் 'ஆதரவளித்தல்' (Supportive Behaviour) எனும் கருத்தாக்கத்திற்கும், 'போற்றுதல்' எனும் சொல் உறவுகளைக் காப்பாற்றும் சமூகத் திறனுக்கும் இணையாக அமைகின்றன.

### *5.5 நற்றிணை — நுண்ணுணர்வு*

நற்றிணையில் தலைவி வெளிப்படையாகச் சொல்லாத உணர்வுகளைக் கூட தோழி, தலைவன், செவிலி, இயற்கைக் குறியீடுகள் வழியாகப் புரிந்துகொள்ள முடிகிறது. பரத்தையர், கணிகையர், விலைமாதர்கள் என்பவர்களோடு கூடிக்குலவும் பழக்கம் பண்டைத் தமிழர்களிடம் இருந்தது உண்மைதான் ஆயினும், அதனை அறிஞர்களும் குலமகளிரும் ஆதரிக்கவில்லை; ஆகாத செயல் என்றே வெறுத்து வந்தனர். பரத்தையர் கூட்டுறவால் ஏற்படும் பழியையும் அவ்வப்போது எடுத்துக்காட்டி அறிவுறுத்தி வந்தனர். இதற்குப் பல உதாரணங்கள் உண்டு. பரத்தை வீட்டிலே தங்கிவிட்டு வந்த ஒரு தலைவனைப் பார்த்துத் தலைவியின் தோழி புத்திமதி சொல்லுகின்றாள். இம்முறையில் அமைந்திருக்கின்றது ஒரு பாடல். புதிய வருவாய்களையுடைய ஊரின் தலைவனே! உன்னுடைய சிறந்த ஆபரணங்களையணிந்த காதல் மகளிரை எமது வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்து, நீ அவர்களைத் தழுவிக்கொண்டு வாழ்ந்தாலும், பிறர் செல்வத்தையே பெரிதாக விரும்பும் அவர்களுடைய அற்பமனத்திலே உண்மைக் காதல் பிறப்பது அரிது. அவர்களும், பசுமையான வளையல்களையணிந்த உனது மனைவிமார்களுடன் ஒன்று சேர்ந்து வாழ்ந்து, குழந்தைகளைப் பெற்றெடுத்து நன்மை நிறைந்த கற்புடன் எம்மைப் போன்ற கற்புடை மகளிர் என்ற பெருமையுடன் வாழ்தல் அதைக் காட்டினும் அரிதாகும்.

***யாணர் ஊர, நின்மாண் இழை மகளிரை***

***எம்மனைத் தந்துநீ தழீஇயினும், அவர்தம்***

***புன்மனத்து உண்மையோ அரிதே; அவரும்***

***பைந்தொடி மகளிரொடு, சிறுவர்ப் பயந்து***

***நன்றி சான்ற கற்பொடு***

***எம் பாடுஆதல் அதனினும் அரிதே***

**— நற்றிணை, பாடல் 330**

இப்பாடலில் அமைந்திருக்கும் சிறந்த கருத்து பாராட்டற்குரியது. விலைமகளிரிடம் உண்மையான காதலை எதிர்பார்க்க முடியாது; அவர்கள் குலமகளிருடன் கூடி ஒத்து வாழமாட்டார்கள். ஒத்து வாழ்ந்தாலும் குலமகளிரைப் போல் குழந்தைகளைப் பெற்றுக் கற்புடன் வாழமாட்டார்கள். ஆதலால் அவர்கள் தொடர்பு வேண்டாம் என இத்தகைய உயர்ந்த அறிவுரை கூறும் பாடலாக இது அமைந்திருக்கின்றது. தோழி வெளிப்படையாகக் கண்டிக்காமல், உவமை வழியே மறைமுகமாக அறிவுறுத்தும் இம்முறை, மோதலைத் தவிர்த்து உறவைச் சீராக்கும் சமூகத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

## 6. புறப்பாடல்களில் உணர்வுசார் நுண்ணறிவு

### *6.1 புறநானூறு — தனிமனித உணர்விலிருந்து சமூக உணர்வு*

முடியாட்சி வர்க்க சமூக நாகரிகத் தோற்றத்தின் விளைவாக, புகழ்பெற்ற இனக்குழு சமூகத்தின் குறுநில மன்னர்கள் அழிக்கப்பட்டனர்; பகுத்துண்ணும் மரபு இயல்பாகக் காணப்படும். இனக்குழு சமூகம் வேரறுக்கப்பட்டு பேரரசு சமூகம் உருவாகிய காலத்தில் தோன்றிய பாடல்களே ஔவையாரின் பாடல்கள் என்றே நம்மால் ஓரளவுக்கு யூகித்துச் சொல்ல முடியும். இனக்குழு சமூகச் சிற்றரசனான அதியனைப் பாடும்போது ஔவையார்,

***"ஒருநாள் செல்லலம்; இருநாள் செல்லலம்;***
***பலநாள் பயின்று, பலரொடு செல்லினும்,***
***தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ"***

**— புறநானூறு, பாடல் 101**

மேலும்,

***"உண்டாயின் பதங்கொடுத்து இல்லாயின்***
***உடன்உண்ணும் இல்லோர் ஒக்கல் தலைவன்"***

**— புறநானூறு, பாடல் 95**

மேலும்,

***"அலத்தற் காலை யாயினும் புரத்தல்வல்லன்"***

**— புறநானூறு, பாடல் 103**

மேலே குறிப்பிட்ட பாடல் வரிகளின் வழி மன்னர்களைப் புகழ்ந்து பாடுகிறார். அதியன் மறவீரனாக இருந்த போதிலும் அவன் செய்த கொடையே அவன் புகழைப் பூமியில் நிறுத்தி உள்ளது எனலாம். மூவேந்தர்களைக் காட்டிலும் குறுநில வேந்தர்களைப் புகழ்ந்து பாடும் தன்மை சங்க காலப் புலவர்களிடம் அதிகம் காணப்படுகிறது.

பழுத்த மரத்தைத் தேடிப் பறவைகள் சென்று சேரும் என புலவர் மரபு இதனை வருணிக்கிறது. மலைநாட்டுச் சிற்றரசர் எழுவரை இணைத்துக் கொடை மடம்பட்ட 'கடையெழு வள்ளல்கள்' என்று பாராட்டினார்கள்; வேந்தர்கள் கூட இவ்வாறு பாராட்டப்படவில்லை. இந்த வள்ளல்களின் கொடை மழை போலப் பயன்கருதிச் செய்யப்படாதது (புறம். 107). மறுமை என்ற இலாபம் கருதிச் செய்யப்படும் வாணிபம் போன்றதல்ல (புறம். 134). நால்வகைப் படையுடன் இருக்கும் வேந்தராக இருந்தாலும் அவர் பண்பில்லாதவராக இருந்தால் செல்வத்தை மதிக்கமாட்டேன் (புறம். 197) எனப் புலவர்கள் வேறுபடுத்திப் பாடினார்கள். மேலும்,

***"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;***
***தீதும் நன்றும் பிறர்தர வாரா;***
***நோதலும் தணிதலும் அவற்றோரன்ன..."***

**— புறநானூறு, பாடல் 152**

"எல்லா ஊரும் எமது ஊர்தான்; எல்லா மக்களும் எமது உறவினர்களே. நமக்கு வரும் இன்பமும் துன்பமும் பிறரால் வருவதில்லை; அவரவர் வினைப்பயனே ஆகும். துன்பமும் அதன் நீக்கமும் இயல்பானவை." மேலும்,

***"பெரியோரை வியத்தலும் இலமே;***
***சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."***

இங்கு மனிதர்களை உயர்வு-தாழ்வு அடிப்படையில் மதிப்பிடாமல் சமநிலையுடன் அணுகும் மனப்பக்குவம் வெளிப்படுகிறது.

### *6.2 பதிற்றுப்பத்து — தலைமைத்துவ உணர்வுசார் நுண்ணறிவு*

புற இலக்கியத்தின் இன்னொரு முக்கியப் பரப்பு அரசனின் உணர்வுசார் தலைமைத்துவம். ஒரு மன்னன் வீரமுடையவன் என்பதைக் காட்டிலும், மக்களின் துயரத்தை உணர்தல், புலவர்களை மதித்தல், கொடை வழங்குதல், வீரர்களின் உணர்வைப் புரிந்துகொள்ளுதல், நாட்டின் நலனை முன்னிறுத்துதல் போன்ற பண்புகளைக் கொண்டிருப்பதே நல்ல தலைமை எனச் சங்க இலக்கியம் காட்டுகிறது.

***நோன்தொடை, ஊன்துவை அடிசில்,***
***கரைவாய்ப் பகுதி, நன்னுதல் விறலியர்,***
***பேரெழில் வாழ்க்கை, செங்கை மறவர்,***
***வெருவரு புனல்தார்***

**— பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்து, பாடல் 3**

ஐந்தாம் பத்து சேரன் செங்குட்டுவன் தன் பகைத்தவர் அழியவும், நட்புடையவர் ஆக்கம் பெறவும் துணை புரிவான். பகைவர் வலிமை கெட வஞ்சியாமல் நின்று போர் செய்பவன். இவனது ஆட்சி

எல்லையாக வடக்கே இமயமும் தெற்கே குமரியும் இருந்தன. இவன் போர் செய்வதையே தொழிலாக உடையவன். இதனை,

*போரடு தானைப் பொலந்தார் குட்டுவ*

**— பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்து, பாடல் 3**

மேலும்,

*பாடு விறலியர் பல்பிடி பெறுக!*
*துய்வீவாகை, அண்கொடி உழிஞை*
*பதால் என்ன வாம்?*
*வென்றி மேவல், உருகெழு சிறப்பின்*

**— பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்து, பாடல் 3**

எனப் பரணர் பாடியதில் இருந்து அறியலாம். வறுமையால் தன்னை நாடி வந்த வறியவர்கள் உண்பவற்றை மறைக்காது உண்ணச் செய்தான்; அவர்களோடு அமர்ந்தே தானும் உண்டான். பாணர், கூத்தர் முதலியோர் மகிழப் பொன்னனணிகள் தந்தான்; விறலியருக்குப் பெண் யானையையும், வீரர்களுக்கு ஆண் யானைகளையும், பாணர்களுக்குக் குதிரையினையும் பரிசாகக் கொடுத்தான். இத்தகைய செயல்பாடுகள், தலைவனொருவனுக்குத் தேவையான உணர்வுசார் தலைமைத்துவத்தின் — அதாவது தன்னைச் சார்ந்திருப்போரின் தேவைகளையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ளும் பிறருணர்வையும், அதற்கேற்பச் செயலாற்றும் சமூகத் திறனையும் — நன்கு எடுத்துக்காட்டுகின்றன.

## 7. விவாதம்: தொல்காப்பியமும் நவீன உணர்வுசார் நுண்ணறிவுக் கோட்பாடும் — ஓர் ஒப்பீடு

மேலே ஆராயப்பட்ட அகப்புற இலக்கியச் சான்றுகளை நவீன உளவியலின் கோல்மென் மாதிரியுடன் (Goleman's Five-Component Model) ஒப்பிட்டு நோக்கும்போது, சங்கப் புலவர்கள் நூற்றாண்டுகளுக்கு முன்பே மனித உணர்வுகளின் அமைப்பையும் அவற்றை மேலாண்மை செய்யும் முறைகளையும் நுட்பமாக அவதானித்திருந்தனர் என்பது புலனாகிறது. கீழ்க்காணும் அட்டவணை இவ்வொப்பீட்டைத் தொகுத்துக் காட்டுகிறது.

| கோல்மென் கூறு (Goleman's Component) | தொல்காப்பிய / மெய்ப்பாட்டுத் தொடர்பு | சங்க இலக்கியச் சான்று | நூல் / பாடல் |
|---|---|---|---|
| சுயவிழிப்புணர்வு (Self-awareness) | நகை, அழுகை, வெகுளி முதலிய | தலைவியின் ஊடலில் தன் மனவேதனையை உணர்ந்து வெளிப்படுத்துதல் | அகநானூறு 05 |

| | | | |
|---|---|---|---|
| | மெய்ப்பாடுகளின் தன்னுணர்வு | | |
| சுயமேலாண்மை (Self-regulation) | உணர்வை வெளிப்படுத்தினும் உறவை முறிக்காத கட்டுப்பாடு | ஊடல் கொண்டும் உறவை முறிக்காத தலைவி | ஐங்குறுநூறு 41 |
| தன்னூக்கம் (Motivation) | பெருமிதம், உவகை மெய்ப்பாடுகள் தூண்டும் செயல்வேகம் | கொடை, வீரம், நாட்டுப்பற்றுடன் இயங்கும் மன்னனின் ஆளுமை | பதிற்றுப்பத்து, ஐந்தாம் பத்து |
| பிறருணர்வு (Empathy) | பிறர் மெய்ப்பாட்டை உணர்ந்து செயல்படும் திறன் | தலைவியின் அச்சத்தை உணர்ந்து ஆற்றுப்படுத்தும் தலைவன்; தோழியின் புரிதல் | குறுந்தொகை 40; நற்றிணை 330 |
| சமூகத் திறன் (Social Skills) | உறவை மேலாண்மை செய்யும் மொழிநடையும் உவமை நுட்பமும் | தோழியின் மறைமுக அறிவுரை; வள்ளல்களின் கொடை நிர்வாகம் | நற்றிணை 330; புறநானூறு 107, 134 |

இவ்வட்டவணை காட்டுவது போல, தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் என்பது வெறும் இலக்கணக் கோட்பாடு மட்டுமல்ல; அது மனித உணர்வுகளின் தோற்றம், வெளிப்பாடு, கட்டுப்பாடு ஆகியவற்றை ஒரு முறைமையாக ஆவணப்படுத்திய தொன்மையான உளவியல் அமைப்பு எனலாம். சங்க அகப்பாடல்களில் தலைவி, தோழி ஆகியோர் காட்டும் உணர்வு மேலாண்மை, சலோவே-மேயர் முன்வைக்கும் 'உணர்வுகளை ஒழுங்குபடுத்தல்' (Regulating Emotion) எனும் கூறுக்கு இணையானது. புறப்பாடல்களில் மன்னரின் கொடை மற்றும் மக்கள் நலம் சார்ந்த செயல்பாடுகள், தலைமைத்துவத்தில் பிறருணர்வும் சமூகத் திறனும் இணைந்து செயல்படும் விதத்தை எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும், மேலைநாட்டு உணர்வுசார் நுண்ணறிவுக் கோட்பாடு தனிமனித மேலாண்மையை மையமாகக் கொண்டிருக்க, சங்க இலக்கியம் அதைத் திணை மரபு, சமூக அமைப்பு, உறவு நெறிமுறைகள் ஆகியவற்றுடன் இணைத்து ஒரு கூட்டு-சமூக நோக்கில் முன்வைப்பது குறிப்பிடத்தக்க வேறுபாடாகும்.

## 8. இன்றைய காலத்திற்கான பொருத்தப்பாடு

சங்க இலக்கியத்தில் காணப்படும் உணர்வுசார் நுண்ணறிவுக் கூறுகள் பின்வரும் தளங்களில் இன்றும் பொருத்தமானவையாக உள்ளன:

- தனிமனித வளர்ச்சி: சுய உணர்வுகளை அறிந்து, சூழலுக்கேற்பக் கட்டுப்படுத்தும் தலைவி/தலைவனின் மனப்பக்குவம் இன்றைய சுயமேம்பாட்டு உளவியலுக்கு முன்னோடி.
- உறவு மேலாண்மை: ஊடல்-கூடல் சுழற்சியில் உறவை முறிக்காமல் பிரச்சினையைத் தீர்க்கும் தலைவியின் அணுகுமுறை, இன்றைய தம்பதியர் ஆலோசனை (Couples Counselling) கோட்பாடுகளுடன் ஒப்பிடத்தக்கது.
- தலைமைத்துவம்: மக்கள் நலனை முன்னிறுத்தும் மன்னரின் பண்பாடு, இன்றைய 'உணர்வுசார் தலைமைத்துவம்' (Emotionally Intelligent Leadership) எனும் மேலாண்மைக் கோட்பாட்டுடன் நேரடித் தொடர்புடையது.
- சமூக நல்லிணக்கம்: "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" எனும் உலகப்பொதுமைச் சிந்தனை, பன்முகப்பட்ட சமூகங்களிடையே பிறருணர்வையும் சமூக விழிப்புணர்வையும் வளர்க்கும் இன்றைய கல்வி நோக்கங்களுக்கு வழிகாட்டியாக அமைகிறது.

## 9. முடிவுரை

பழந்தமிழர் வாழ்வியல் நாகரிகம், பண்பாடு மற்றும் அரசியல் நிலையை அறிய உதவும் உலகப் புகழ் பெற்ற இலக்கியம் செம்மொழி இலக்கியமாகும். தொல்காப்பியத்தின் மெய்ப்பாடுகள் உணர்வுகளின் வெளிப்பாட்டிற்குக் கோட்பாட்டு அடித்தளத்தை அமைக்கின்றன. குறுந்தொகையில் காதல் உணர்வைப் புரிந்துகொள்ளும் தலைவனின் நுண்ணுணர்வும், ஐங்குறுநூறு மற்றும் நற்றிணையில் தலைவி-தலைவன்-தோழி உறவுகளுக்கிடையே காணப்படும் உணர்வு மேலாண்மையும் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. அது மனித உணர்வுகளை அடையாளம் காணுதல், அவற்றைக் கட்டுப்படுத்துதல், பிறரின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதல், உறவுகளைச் சிறப்பாகக் கையாளுதல் மற்றும் சமூக நலனை முன்னிறுத்துதல் ஆகிய உணர்வுசார் நுண்ணறிவின் பல்வேறு பரிமாணங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள வாழ்வியல் இலக்கியமாகத் திகழ்கிறது. இவ்வகையில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்கப் பாடல்கள் இன்றைய உளவியல் கருத்துகளோடு உரையாடக்கூடிய ஆழமான மனிதநேயச் சிந்தனைகளை வழங்குகின்றன. சலோவே-மேயரும் கோல்மெனும் இருபதாம் நூற்றாண்டில் கோட்பாடாக்கிய உணர்வுசார் நுண்ணறிவின் பெரும்பாலான கூறுகள் — சுயவிழிப்புணர்வு முதல் சமூகத் திறன் வரை — சங்க இலக்கியத்தில் ஏற்கெனவே வாழ்வியல் நடைமுறையாக இயங்கியிருந்தன என்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது. சங்க இலக்கியத்தில் காணப்படும் இத்தகைய உணர்வுசார் நுண்ணறிவுக் கூறுகள், இன்றைய

தனிமனித வளர்ச்சி, உறவு மேலாண்மை, தலைமைத்துவம் மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றிற்கும் பொருத்தமான வழிகாட்டுதல்களை வழங்குகின்றன. எனவே, சங்க இலக்கியத்தை வெறும் பழம்பெருமைக்குரிய இலக்கியமாகக் காணாமல், நவீன உளவியல் கோட்பாடுகளை மறு ஆய்வுக்கு உட்படுத்தும் ஒரு உயிரோட்டமுள்ள அறிவுப் பேழையாகக் காணவேண்டியது இன்றியமையாதது.

## துணைநூற் பட்டியல் (Works Cited — MLA 9th Edition)

[1.] இளம்பூரணர். தொல்காப்பியம் - பொருளதிகாரம். பூம்புகார் பதிப்பகம், 2008.

[2.] தமிழ் அண்ணல், முனைவர். குறுந்தொகை. முல்லைப் பதிப்பகம், 2012.

[3.] சோமசுந்தரனார், பொ. வே. வே. ஐங்குறுநூறு. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், [தேதி இல்லை].

[4.] புலியூர்க் கேசிகன். புறநானூறு. சாரதா பதிப்பகம், 2010.

[5.] இராசமாணிக்கனார். கலித்தொகை. பூம்புகார் பதிப்பகம், [தேதி இல்லை].

[6.] சிவத்தம்பி, கா. தமிழில் இலக்கிய வரலாறு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1988.

[7.] அருணா தேவி, பி. "Landscape in Sangam Literature." Tamil Literature Online, 2018.

[8.] புலியூர்க் கேசிகன். பதிற்றுப்பத்து (தெளிவுரை). பாரி நிலையம், 2008.

[9.] வேலுப்பிள்ளை, ஆ. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும். பாரி நிலையம், 2000.

[10.] Goleman, Daniel. Emotional Intelligence: Why It Can Matter More Than IQ. Bantam Books, 1995.

[11.] Mayer, John D., and Peter Salovey. "Emotional Intelligence." Imagination, Cognition and Personality, vol. 9, no. 3, 1990, pp. 185-211.

[12.] Gayathri, N., and K. Meenakshi. "Emotional Intelligence in the Indian Context." ResearchGate, 2013, www.researchgate.net/publication/281288050_Emotional_Intelligence_in_the_Indian_Context. Accessed 3 Sept. 2026.

[13.] Pandey, Mamta, et al. "Research on Emotional Intelligence Among Indian Teachers: A Systematic Review and Meta-Analysis of Its Correlation with Health Parameters and Impact of Gender." F1000Research, vol. 12, 12 Feb. 2024, doi:10.12688/f1000research.143151.2.

[14.] "மெய்ப்பாடு (தொல்காப்பிய நெறி)." விக்கிப்பீடியா, Wikimedia Foundation, 24 Nov. 2025, ta.wikipedia.org/wiki/மெய்ப்பாடு_(தொல்காப்பிய_நெறி). Accessed 3 Sept. 2026.

## ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு (Author's Declaration of Conflict of Interest)

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர், இக்கட்டுரையின் ஆய்வு, எழுத்து, மற்றும் வெளியீடு தொடர்பாக எவ்வித நிதி ரீதியான, தனிப்பட்ட, அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் (Conflict of Interest) இல்லை என உறுதிப்படுத்துகிறார். இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்ட அனைத்து மூல, துணை நூல்களும் முறையாக மேற்கோள் காட்டப்பட்டு, துணைநூற் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வு எந்தவொரு நிறுவனத்தின் அல்லது நபரின் நிதியுதவியின்றி, தனிப்பட்ட கல்வி ஆர்வத்தின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது.